**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.346/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-1/Pw-1 |
| Name | : பானுமதி |
| Husband's Name | : சுதாகர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.05.2024.

முதல் விசாரணை-

நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 12.03.2023 அன்று எனது கணவர் சுதாகர் வீட்டிலிருந்து கடைக்கு நடந்து சென்றார். மாலை சுமார் 6.30 மணிக்கு காட்டாங்கொளத்தூர் நகராட்சி அலுவலகம் அருகே செங்கல்பட்டு – தாம்பரம் சாலையைக் கடக்க முயன்ற போது கார் மோதி தலையில் காயம் ஏற்பட்டது. மேற்படி தகவலை போன் மூலமாக அறிந்து SRM மருத்துவமனைக்குச் சென்று பார்த்தேன். அங்கு என் கணவருக்கு தலை மற்றும் காலிலும் காயம் ஏற்பட்டு இருந்தது. அங்கிருந்து சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். மறுநாள் சிகிச்சைப் பலனின்றி இறந்து விட்டார். சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்தில் புகாக் அளித்தேன். புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

மேற்படி புகாரானது அ.தா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் எனக்கு தெரியாது. எனக்கு தகவல் யார் தெரிவித்தார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தை அடித்தல், திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரினை நான் தான் எழுதினேன். இழப்பீடு கேட்டு வழக்கினை தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி இழப்பீடு பெறுவதற்காக பொய்யான புகாரைக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

sd/-xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.346/2023**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-3/Pw-2 |
| Name | : ஜெகந்நாதன் |
| Husband's Name | : சித்திரைவேல் |
| Village | : பொழிச்சலூர் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.05.2024.

முதல் விசாரணை-

நான் கார் மெக்கானிக்காக வேலை செய்கிறேன். கடந்த 12.03.2023 அன்று மாலை சுமார் 7 மணிக்கு மறைமலை நகர் நகராட்சி அலுவலகம் எதிரில் செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் நோக்கிச் வேகமாக வந்த டா இண்டிகா கார் அங்கு நடந்து சென்ற ஒரு நபரின் மீது மோதியது. நான் வேகமாக வந்து கார் மோதியதைப் பார்த்தேன். தலை மற்றும் காலில் அவருக்கு காயம் ஏற்பட்டது. அவரை ஆம்புலன்சில் ஏற்றி SRM மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி காரை யார் ஓட்டினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை**

சொன்ன தேதி, சொன்ன நேரத்தில் விபத்து எதுவும் ஏற்படவில்லை என்றும் அதனை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

sd/−xx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi,
Judicial Magistrate No.II,
Chengalpattu.